# பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் மக்கள் ஆர்வம் இல்லை

## மன்னாரில் சார்ள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

"வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பைப் பொறுத்த வரையில் அங்குள்ள தமிழர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர் ஒரு தமிழ்த் தலைமையை இன்னும் அடையாளம் காணவில்லை. எனவே, தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர்." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். மன்னாரில் உள்ள தனது அலுவலகத்தில் இன்று காலை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழரசுக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது யாரை ஆதரிப்பது அல்லது தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து இதுவரை எவ்வித கலந்தாலோசனைகளையும் முன்னெடுக்கவில்லை. 2➤



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 02 திங்கட்கிழமை 15.04.2024 கதிர் 230




## அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பதவி விலகுவார்! ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் திட்டமாம்

### அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு

நீதி அமைச்சர் பதவியிலிருந்து விலகி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களின் மூலம் தெரிய வருகின்றது. அமைச்சருடன் மேலும் 5 அமைச்சர்களும் அரசாங்கத்திலிருந்து விலக தீர்மானித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் 2➤



## ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஆவணங்களை கொண்டு சென்றதாக ஊடகச் செயலாளர் பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்துகிறார்!

### சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் தயாசிறி எம்.பி.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்திலிருந்த ஆவணங்களை ரகசியமாக எடுத்துச் சென்றதாக கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மீது குற்றம் சுமத்திய கட்சியின் ஊடகச் செயலாளர் திசர குணசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தாம் நீக்கப்பட்டு ஒன்பது மாதங்களுக்கும் மேலாகியுள்ளதாகவும், அந்தக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சி அலுவலகத்திற்குச் செல்லவில்லை எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இருப்பை அழிக்க முற்படும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சார்பான குழுவைச் சேர்ந்த திசர குணசிங்க தெரிவித்துள்ள இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். 2➤



## பிரான்ஸில் இருந்து யாழ். வந்த பெண் கொரோனா வைரஸ் தொற்றால் மரணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் கொரோனோவைரஸ் தொற்று காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிரான்ஸில் இருந்து ஆயுள்வேத சிகிச்சைக்காக வந்திருந்த 62 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் வட்டுக் கோட்டை அராலியில் தங்கியிருந்த நிலையில் தொடர் காய்ச்சல், இருமல் காரணமாக இரண்டு நாள்கள் 2➤



## கைப்பேசிப் பாவனையால் நிகழும் குற்றங்களால் பாதிக்கப்படுபவர்களில் 63 வீதம் பெண்களாவர்!

### கைப்பேசிக் குற்றப் புலனாய்வுக் கணினிப் பிரிவு தெரிவிப்பு

கைபேசி குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் கணினிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் குற்றங்களால் பாதிக்கப்படுவோரில் 63 வீதமானவர்கள் பெண்கள் எனத் தெரியவந்துள்ளது.

இலங்கையில் 23 மில்லியன் மக்கள் உள்ளதாகவும், கையடக்கத் தொலைபேசி பாவனையும் அதற்கு சரிசமமாக 23 மில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் வீட்டின் பிரதான குடியிருப்பாளரிடம் மட்டுமே 2➤

## இம்முறை தேர்தலில் வழமைக்கு மாறாக அதிகமான தேர்தல் கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப்படுவர்!

### 'பஃரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஏனைய தேர்தல்களை விட இம்முறை அதிக எண்ணிக்கையிலான சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு வரவழைக்க திட்டமிட்டுள்ளதாக 'பஃரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவொன்று அண்மையில் இலங்கைக்கு வந்து 'பஃரல்' அமைப்பு மற்றும் தேர்தல் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடி சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்காக சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைத்து வருவது தொடர்பாக ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்புடன் 2➤

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் ஏப்ரல் 24, 25, 26 திகதிகளில் நடைபெறும்!

*ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை ஏப்ரல் 24, 25, 26 ஆகிய மூன்று நாட்களுக்கு நடத்த நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானம் மேற்கொண்டுள்ளது. பிரதிசபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற தகவல் தொடர்பாடல் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.*

*அதன்படி, 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை குற்றவியல் நடைமுறை (திருத்த) சட்டமூலம் (இரண்டாம் வாசிப்பு) மற்றும் விஷம், அபின் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் கட்டளைச்சட்டத்தின் கீழான உத்தரவுகள் மீதான விவாதம் நடைபெறவுள்ளது.*

*ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த பிரேரணையின் பிரகாரம் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதில் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.*

*(ரெசி-57)*

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

## பிரான்ஸில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்பின் பின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட்டுள்ளன. நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கடந்த வார இறுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், அவரிடம் நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா என ஊடகவியலாளர்கள் அதன்போது கேட்டபோது, 'மக்கள் கேட்டுக் கொண்டால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார்' என அவர் பதிலளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதன்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பல கட்சிகளின் கூட்டணியில் கீழ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விஜயதாச ராஜபக்ஷ தயாராகவுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெசி-55)

## பொது வேட்பாளர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து ஊடகங்களில் கருத்துக்கள் வெளி வருகின்றன. என்னைப் பொறுத்தமட்டில் அவர்கள் கூறுவதன் பிரதான காரணம் தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தாலும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்கின்ற சிலரது கருத்துக்கள் நிலவுகின்றன.

எனது தனிப்பட்ட கருத்தாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது மிகவும் கடினமான விடயம்.

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பைப் பொறுத்த வரையில் அங்குள்ள தமிழர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர் ஒரு தமிழ்த் தலைமையை மக்கள் இன்னும் அடையாளம் காணவில்லை. காணவும் முடியாது என்பது என்னுடைய கருத்து.

எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கட்சித் தலைவர் அல்லது பொதுவானவர்களையோ அடையாளம் காண்பது என்பது கடினமான விடயம்.

குறிப்பாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கு மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இருப்பதாக நான் காணவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாகத் தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படும்போது - வேட்பாளர்கள் தேர்தலில் நிறுத்தப்படும்போது அந்த நேரத்தில் கட்சி ஒரு தெளிவான முடிவை எடுக்கும்." - என்றார்.

மேலும், கச்சதீவு விவகாரம், இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் குறித்தும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கருத்துத் தெரிவித்தார். (அ)

## கைபேசி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைபேசி பாவனை இருந்ததாகவும், தற்போது அது கணவன்-மனைவி, குழந்தைகள் என முழு குடும்பத்தினரின்கைகளுக்கு சென்றுள்ளதாகவும், கடந்த மூன்று மாதங்களில், கணினி குற்றங்கள் தொடர்பான புகார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், இந்த எண்ணிக்கை 1500 ஐ எட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸாரின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் கண்டி, மாத்தறை, அம்பாறை மற்றும் குருணாகல் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள உள்ளூர் புலனாய்வுப் பிரிவுகளும் இனந்தெரியாத நபர்களால் ஏமாற்றப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-59)

## ஸ்ரீ.ல.சு.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகச் செயலாளர் திசர குணசிங்கவின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகவியலாளர்கள் கருத்து கேட்டபோதே தயாசிறி எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த குழுவினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீது உண்மையான அன்பைக் கொண்டிருந்தால் இவ்வாறு கட்சியை பிளவுபடுத்த முயற்சிக்க மாட்டார்கள் எனவும் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-56)

# திருமலையில் கத்தியால் குத்தி ஒருவர் படுகொலை

*திருகோணமலை – பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்காகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*சேருநுவர - கல்வல சந்தியில் வசித்து வந்த எம்.ஜீ. சஞ்சீவ கருணாரத்ன (வயது 41) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.*

*அனுராதபுரம், கண்னேவ பகுதியில் வசித்து வந்த சம்பிகா குமாரி என்பவர் திருமணம் செய்த கணவரை விட்டுப் பிரிந்து சேருநுவர பகுதியில் மற்றுமொரு நபருடன் வாழ்ந்து வந்துள்ளார்.*

*இந்நிலையில், முதலாவது கணவர், மனைவியைத் தேடி வந்து, மனைவியுடன் வாழ்ந்து வந்த மேற்படி நபரைக் கத்தியால் குத்தினார் என்று ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.*

*சம்பவம் தொடர்பான விசாரணைகளை சேரநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)*

## இம்முறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'பஃரல்' அமைப்பு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், தேர்தல் நடைபெற முன்னர் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல், அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் தொடர்பில் 'பஃரல்' அமைப்பு கடுமையான அவதானத்துடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட 'மார்ச் 12' அமைப்பின் உறுப்பினர்கள் 5,000 பேர் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்றில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பான விழிப்புணர்வு மாநாடொன்று கொழும்பு விஹார மகாதேவி பூங்கா திறந்த வெளியரங்கில் நடத்தப்பட்டிருந்ததாகவும் 'பஃரல்' அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-58)

# கிளிநொச்சிப் பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி, கண்டவளைப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசத்தால் பொது மக்கள் கடுமையான அசௌரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொழுந்து புலவு பகுதியில் தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்பு பகுதிகளில் காட்டு யானைகள் உட்புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் அப்பகுதியில் வாழும் சுமார் 300 மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமது ஜீவனோபாயத்துக்காக விவசாயச்செய்கையினை மேற்கொண்டு வரும் அம்மக்கள், தென்னை, வாழை, பூசணி போன்ற பயிர்களை யானைகள் அழித்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று இரவும் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த ஆறு காட்டு யானைகள் 120 இக்கும் மேற்பட்ட வாழைகள், 50 இக்கும் மேற்பட்ட தென்னைகள் என்பவற்றை அழித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் அப்பகுதியில் வாழும் மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளதோடு சிலர் உறவினர் வீடுகளில் இரவு தங்கும் அவல நிலைமையும் அங்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாதிப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு தமது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும், நிரந்தரமான யானை வேலி ஒன்றை அமைத்துத் தர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

# மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியடைவு

*உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.*

*இதன்படி, பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90.12 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.*

*அத்துடன் டபிள்யு ரி ஐ ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85.27 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.*

*இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை இன்றைய தினம் 1.766 அமெரிக்கடொலராககுறைவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

*(04)*






செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com





# கண்ணகி ஆலயத்தில் கை விசேடம் வழங்கல்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மனாலயத்தில் புது வருடப்பிறப்பை முன்னிட்டான கைவிசேட நிகழ்வு நேற்று இடம் பெற்றது.
(படங்கள் த.சகாதேவராஜா)

# கிழக்கிலங்கையில் முதன்முறையாக விழிப்புணர்வு கால்பந்தாட்டப் போட்டி



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கிழக்கிலங்கையில் முதன்முறையாக விழிப்புணர்வு கால்பந்தாட்டப் போட்டி மட்டக்களப்பு திராய்மடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

யூபா சிறுவர் கழகத்தின் இயக்குனர் ப.தினேஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக, கிழக்கு மாகாண சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் கலந்து கொண்டார். 'போதையற்ற நாடும் சௌபாக்கியமான தேசம்' எனும் தொனிப்பொருளில் நிகழ்வு இடம்பெற்றது.

சிறுவர்களூடாக சமூகத்தை விழிப்பூட்டும் நோக்கில் இந்த கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போட்டியில் 11 விளையாட்டு அணியினர் கலந்து கொண்டு திறமைகளை வெளிக்காட்டினர்.

சான்றிதழ்களும் வெற்றி கிண்ணங்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரி.மதிராஜ், நரம்பியல் விஞ்ஞானி எம். கீதாஞ்சன், சீற்ஸ்ரீலங்கா நிறுவன பணிப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

# அஷ்ஹறியன்ஸ் இளைஞர் நண்பர்கள் அமைப்பின் 4 வருடப் பூர்த்தி நிகழ்வு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அஷ்ஹறியன்ஸ் இளைஞர் நண்பர்கள் அமைப்பின் 4 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மேலங்கி அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் (13) தனியார் கல்வி நிறுவனமொன்றில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம். மன்சூரும் அதீதிகளாக வர்த்தகர் சியான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நளீம் மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்யாலய ஆசிரியரும் சட்டக் கல்லூரி மாணவனுமான ஹாதிக் இப்ராஹிம், அஷ்ஹறியன்ஸ் சமூக சேவை அமைப்பின் ஆலோசகர்களும் ஆசிரியர்களுமான சியாட், அஷ்ரப் (பலாஹி) ஆகியோர் கலந்து



கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கடந்த 4 வருடங்களில் கடந்து வந்த பாதை என்ற அடிப்படை முன்மொழிவொன்றின்றினை அமைப்பின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஹரீஸ் நிகழ்த்தியிருந்தார்.




# அம்பாறையில் மின்சார வேலி பராமரிப்பு மனித - யானை மோதல்கள் தொடர்பாக உள்ளூர் சமூகத்திற்கான விழிப்புணர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பண்டாரதுவ கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியுடன் மின்சார வேலிகளை திறம்பட பராமரிப்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடைபெற்றது.

பண்டாரதுவ கிராமம் காட்டு யானைகளின் தாக்கத்தால் மிகவும் பாதிக்கபடும் பகுதியில் அமைந்துள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் நடவடிக்கைகள் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஹெல்ப் ஸ்ரீலங்கா ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

காலை அமர்வில், குடிமைப் பாதுகாப்புத் துறையின் காவலர்களால் நடத்தப்பட்ட பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்,

அதனைத் தொடர்ந்து கிராம விவசாயி அமைப்புகளின் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி இடம்பெற்றதுடன், நல்லிணக்கத்துடன் வாழ்வது மற்றும் மனித - யானைகள் அமைதி என்ற தலைப்பில் வீடு வீடாக பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது.

# முறையான பேருந்துத் தரிப்பிடம் இல்லாமையால் எழுந்த சிக்கல்கள் பரீட்சார்த்த அடிப்படையில் சேவைகளை நடத்துவதற்குத் தீர்மானம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தினார்



இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் இணைந்த பேருந்து சேவையை முன்னெடுப்பதில் இருந்துவரும் இழுபறி நிலையை அடுத்து யாழில் நெடுந்தூர தனியார் பேருந்து சேவையில் ஈடுபட்டுவரும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கான முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாமையால் எழுந்த பிரச்சினைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டை அடுத்து பரீட்சார்த்த அடிப்படையில் சேவைகளை நடத்துவது என சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது.

முன்பதாக முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாமையை கண்டித்து உள்ளூர் மற்றும் நெடுந்தூர தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அரச மற்றும் தனியார் பேருந்துச் சேவையிலீடுபடும் தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சுமுகமான தீர்வு எட்டப்படாமையால் அன்றையதினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பில் வடக்கின் ஆளுநர் தலைமையில் 5 பேர் அடங்கிய விசேட குழு ஒன்றை நியமித்து பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியிருந்தார்.

இந்நிலையில் இன்றையதினம் குறித்த பிரச்சினைக்கான தீர்வை வழங்கும் வகையில் ஆளுநர் அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது.

குறித்த குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் பரீட்சார்த்தமான முறையில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் வீர சிங்கம் மண்டபத்திற்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் இருந்து இணைந்த சேவை பரீட்சார்த்த அடிப்படையில்நெடுந்தூர சேவைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர்ட டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார். (01)

# தமிழ் மக்கள் சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்! – சாணக்கியன்



இந்த வருடத்தில் தமிழ் மக்கள் எடுக்கும் அனைத்து தீர்மானங்களும் தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடியதான தீர்மானமாக இருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இவ் வருடம் தேர்தல்கள் நிறைந்த வருடங்களாக இருக்கக்கூடும் என்றும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும்மே18 ஆம்திகதி முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தில் மக்கள் கொல்லப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியாகவுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருடத்தில் அரசியல் ரீதியாக தமிழ் இனம் சார்ந்து, இனத்தை தலை நிமிர்ந்து வாழ வைக்கக்கூடிய வகையிலான தீர்மானங்களை தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டும், எனவும் சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார். (04)

# நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு வழக்கு

நாடளாவிய ரீதியில் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்தமை உள்ளிட்ட தவறுகள் தொடர்பில் இவ்வாறு வழக்குத்தொடரவுள்ளதாக அதிகாரசபையின் விசேட விசாரணைப் பணிப்பாளர் சஞ்ஜய இரசிங்க தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 7,627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# யானை தாக்கி ஒருவர் காயம்

வவுனியா, மாமடுப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினமான நேற்று மாலை வவுனியா, மாமடு - கள்ளிக்குளம் வீதியில் நபர் ஒருவர் பயணித்தபோது வீதியில் நின்ற யானை மேற்படி நபர் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

பின்னர் அந்த வீதியால் சென்றோர் தாக்குதலுக்குள்ளான நபரை வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பில் மாமடுப்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாமடு - கள்ளிக்குளம் வீதியில் உள்ள பல காணிகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ள போதும், அவ்வீடுகளில் பலரும் குடியிருக்காமையால் அப்பகுதி பற்றைக் காடுகளாக மாறியுள்ளதுடன், காட்டில் இருந்து வரும் யானைகள் அப்பற்றைக்காடுகளின் ஊடாக வீதிக்கு வருகை தருகின்றன என்றும், தினமும் அப்பகுதியில் நடமாடித் திரிவதுடன் வீதியில் செல்வோரைத் தாக்க முயற்சிக்கின்றன என்றும் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# அதிவேக நெடுஞ்சாலைகளின் போக்குவரத்து 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தகவல்!

நேற்று முன் தினம் மாத்திரம் அதிவேக நெடுஞ்சாலைகளில் 128,000 வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலைகளின் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.ஐ.டீ. கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதனூடாக 4 கோடியே 44 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிவேக நெடுஞ்சாலைகளின் போக்குவரத்து 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் கிடைத்த வருமானம் 15 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிவேக நெடுஞ்சாலைகளில் செலுத்துவதற்கு தகுந்த வாகனங்களை மாத்திரம் செலுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளியேறும் வாயில்களுக்கு அருகில் நிலவும் அதிக வாகன நெரிசலைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (04)

# மோதல்களில் 7 பேர் காயம்

*திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவில் இருவேறு மோதல் சம்பவங்களில் ஏழு பேர் காயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவபிரதேசவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*புத்தாண்டு பிறப்பையொட்டி நட்பு ரீதியாக மது அருந்திக் கொண்டிருந்த வேளையில் நொச்சிக்குளம் - சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த 4 பேர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்த நிலையில் இன்று அதிகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*20 - 25 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.*

*இதேவேளை, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் மஹதிவுல்வெவ பிரதேசத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தனது குடும்பத்தாருடன் ஓட்டோவில்பயணித்துக்கொண்டிருந்தபோது சக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*இதன்போது காயமடைந்த தாயும் மகனும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)*

# விசேட நடவடிக்கைகளின்போது 240 சந்தேக நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின்போது போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 240 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஹெரோயின் 104 கிராம் 705 மில்லிகிராம், ஐஸ் 58 கிராம் 324 மில்லிகிராம், கஞ்சா 191 கிராம் 165 மில்லிகிராம், மாவா 86 கிராம் 65 மில்லி கிராம், போதை மருந்துகள் 35 கிராம் 86 மில்லிகிராம் என வைத்திருந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 240 சந்தேக நபர்களில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகம் ஆகியவற்றின் பட்டியலில் இருந்த 13 சந்தேக நபர்களும், அழைப்பாணையின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 11 பேரும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# மட்டு. இ.கி.மிசன் இல்ல சிறார்களின் புத்தாண்டு விளையாட்டு விழா





(வி.ரி. சகாதேவராஜா)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி ராமகிருஷ்ணபுரத்தில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் சிறுமியர் இல்ல மாணவர்களின் விளையாட்டு விழா இடம் பெற்றது.

பல்வேறுவிதமான விளையாட்டுப்போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி வைத்தார்.

## வருடாந்த பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி கல்வி அபிவிருத்தி கலந்துரையாடல்

(எம்.ஏ.றமீஸ்)

கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் பஹ்றியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி சம்பந்தமாகவும், இப்பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைஷல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது நாபீர் பவுண்டேஷன்ஸ்தாபக தலைவரும்பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



இப்பாடசாலைச் சமூகத்தினை விளையாட்டின் மூலம் ஒன்றிணைத்து ஒற்றுமை, சமாதானம், விட்டுக் கொடுப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆண்டு தோறும் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யும் பஹ்றியன் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டியினை சிறப்புற நடத்துவது தொடர்பிலான இக்கலந்துரையாடலின்போது பாடசாலை அபிவிருத்திச் சபை மற்றும் பழைய மாகணவர் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இச்சுற்றுப் போட்டி தொடர்பாகவும் பாடசாலை அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் கல்வி விருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் இச்சுற்றுப் போட்டியினை சிறப்புற மேற்கொள்வதற்கு பூரண அனுசரணை வழங்குவதற்கான பங்களிப்புக்களை செய்வதற்கும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக தாம்கவனம்செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.



## வீரபத்திரர் சுவாமி ஆலயத்தில் கைவிசேடம் வழங்கும் நிகழ்வு

(எம்.எம்.றம்ஸீன்)

குரோதி சித்திரைப் புதுவருடப் பிறப்பு சுபநேரத்தில் காரைதீவு வீரபத்திரர் சுவாமி ஆலயத்தில் கைவிசேடம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறை ஊடக மையத்தின் ஆலோசனை வழிகாட்டல் சந்திப்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சமூக ஊடக ஆர்வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந்துறை ஊடக மையத்தின் உறுப்பினர்களுக்கும் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பிணக்குகள் தீர்ப்பு பொறுப்பாளரும் ஓய்வு பெற்ற பிரதான பொலிஸ் பரிசோதருமான எம். எஸ். அப்துல் மஜீட் உடனான சந்திப்பு சம்மாந்துறை ஊடக மைய காரியாலயத்தில் நேற்று (14) இடம்பெற்றது.

இதன்போது சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பிணக்குகள் தீர்ப்பு பொறுப்பாளரும் ஓய்வு பெற்ற பிரதான பொலிஸ் பரிசோதருமான எம். எஸ். அப்துல் மஜீட் கருத்து தெரிவிக்கையில், சம்மாந்துறையில் காணப்படும் பள்ளிவாசல்கள், சம்மாந்துறையின் அழிந்து போகும் பழமையான வரலாறுகள், சம்மாந்துறையில் புதைந்து கிடக்கும் கலைஞர்கள் மற்றும் சாதனையாளர்கள் போன்ற பல விடயங்களை ஊடகம் என்ற ரீதியில் வெளிக்கொண்டு வர வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களிடம் காணப்படுகிறது, என்று குறிப்பிட்டார்.

மேலும் எதிர் காலத்தில் சம்மாந்துறையில் இளம் ஊடகவியலாளர்களை உருவாக்கவும், சம்மாந்துறை ஊடக மையத்தை சரியான பாதையில் கொண்டு செல்லவும் பல ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஊடக மையத்தின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.



# கண்டி – புஸ்ஸல்லா வாகன விபத்து உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு!

கண்டி – புஸ்ஸல்லா பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும், நால்வர் படுகாயமடைந்துள்ள நிலையில், கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் நிலைமை மோசமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புத்தாண்டுக் காலப்பகுதியில் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு பயணித்த சுற்றுலாப் பயணிகள், மீண்டும் நுவரெலியாவிலிருந்து கொழும்புக்கு திரும்பும் வழியிலேயே இந்த கோர விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குறித்த நபர்கள் பயணித்த வான், கம்பளை – புஸல்லாவ பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு பள்ளத்தில் விழுந்ததில், 2 வயதுடைய குழந்தை உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த ஐவர் உடனடியாக அயலவர்களால் மீட்கப்பட்டு, வகுஹப்பிட்டிய மற்றும் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவரும் நேற்று இரவு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், சம்பவத்தில் படுகாயமடைந்த ஏனைய நால்வரின் நிலைமையும் கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விபத்து நேர்ந்தபோது குறித்த வானில் 10 பேரளவில் பயணித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம், நேற்று காலை 7 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் பல்வேறு விபத்துக்கள் காரணமாக 162 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்கள் காரணமாக 37 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லான தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் பட்டாசு விபத்துக்கள் எதுவும் பதிவாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், இம்முறை புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக வைத்தியர் ருக்ஷான் பெல்லான மேலும் தெரிவித்துள்ளார். (04)

# இவ்வருடத்தில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை 21,000 ஐக் கடந்தது!

இவ்வருடம் பதிவாகிய டெங்கு நோயளர்களின் எண்ணிக்கை 21,000 ஐக் கடந்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தில் ஏப்ரல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 21,028 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இகில், கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் (4,527) பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண ரீதியில் மேல் மாகாணத்தில் 7,547 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், ஏப்ரல் மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 989 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாகப் பெய்த மழையின் காரணமாக ஏற்படக்கூடிய டெங்கு நோய்ப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில், சுற்றாடலைச் சுத்தமாகப் பேணுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர். (04)

# மீனவர் பிரச்சனைக்கும் கச்சதீவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை!

கச்சதீவுக்கும் மீனவர் பிரச்சனைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை, என அகில இலங்கை மீனவர்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார். இலங்கை – இந்திய மீனவர் பிரச்சனை தொடர்பாக இந்தியாவின் தமிழகத் தேர்தல் மேடைகளில் அரசியல் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் வடக்கு தமிழ் மக்களுக்கு வேதனை அடைவதாக அன்னலிங்கம் அன்னராசா நேற்று (14) நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடனான உறவு தொடரவேண்டும் என்றும் பூகோள அரசியல் ரீதியாக இந்திய அரசுடன் ஒற்றுமையாக இருக்க விரும்புவதாகவும் இலங்கை மீனவர்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (04)

# முட்டை விலை அதிகரிப்பு!


*புத்தாண்டை முன்னிட்டு, உள்நாட்டுச் சந்தையில் முட்டை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.*

*இறக்குமதிசெய்யப்படுகின்ற முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளபோதிலும் உள்நாட்டில் முட்டை விலை குறைக்கப்படவில்லை, என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.*

*இதனிடையே பண்டிகைக்காலத்தில் பொதுமக்களின் நன்மை கருதி லங்கா சதொச விற்பனை நிலையத்தில் 36 ரூபாய்க்கு முட்டை விற்பனை செய்யப்பட்டது.*

*எனினும் கடந்த காலங்களில் 40 முதல் 45 ரூபாய் வரை முட்டையொன்று விற்பனை செய்யப்பட்ட நிலையில் புத்தாண்டு காலத்தில் பெரும்பாலான வர்த்த நிலையங்களில் 50 முதல் 60 ரூபாய் வரை முட்டை விற்பனை செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.*


*உள்ளூரில் முட்டை விலையினைக் குறைப்பதற்கு வர்த்தகர்கள் நடவடிக்கை எடுக்காவிடின் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)*








## கற்பிட்டி அல் அக்ஸா பாடசாலை சிரமதானப் பணிக்கு அழைப்பு




(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை (16) இடம்பெறவுள்ள சிரமதான பணியில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என சகலரையும் கலந்து கொள்ளுமாறு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜீனாஸ் அறிவித்துள்ளார்.

நீண்ட விடுமுறைக்குப் பின்னர் பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலில் சிரமதானம் மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது.

இதன் அடிப்படையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் ஒத்துழைப்புடனும் பெற்றோர்களின் பங்களிப்புடனும் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் பி.ப 12.30 மணிவரை நடைபெறும் மேற்படி சிரமதான பணிக்கு சகலரினதும் வருகை வரவேற்கப்படுகின்றது, என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொலனறுவ மாவட்ட சிறிய மற்றும் நடுத்தர குடும்ப உறுப்பினர்களின் பொருளாதாரம் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யுனைடெட் யூத் இளைஞர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொலன்னறுவ மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தர குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் கலந்துரையாடும் நிகழ்வு வனதா கடுகாலியாவ வனஜீவி பிரஜா அமைப்பின் மண்டபத்தில் நடைபெற்றது.

பொலன்னறுவை மாவட்ட விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து விளையாட்டுக்கழக தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி வி.ஜே.ஜே. வத்தேகமவினால் ஒருங்கமைக்கப்பட்ட இந்த மக்கள் சந்திப்பின் போது விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டபோது கண்டறியப்பட்ட சில பிரச்சினைகள் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.04.2024இல் வெளியிடப்பெற்றது.